குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர்

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 2-12-58 செவ்வாய் | இசை: 27

தாய்மார், போருக்கு மக்களை அனுப்புக!

அருந்திய பால்முலை
அறுத் தெறிந்த தாய்
அறத்துணை பூண்ட
மறத் தமிழ் நாடு! (அருந்திய)

வரும்பகைக் களிற்றின் நெற்றியிற் புதைந்தவேல்
வாங்காது வந்தனன் தீங்கான மைந்தன் (அருந்திய)

தெரிந்திருக்கும் தமிழர்தம் வீரம்!
இடையி லேமறந் திருக்கவும் கூடும்;
சரிந்த பகைவர்கால் தமிழகம் தீண்டுமுன்
தாய்மார் மக்களை அனுப்புக தாக்கவே (அருந்திய)

இமய வட்டாரம் தாக்கிய சோழன்
இருந்த மலைத்தொடர் ★சோழமலைத் தொடர்!
தமிழன் தாக்கினை மறந்தாரைத் தாக்கத்
தாய்மார் மக்களைப் போருக் கனுப்புக (அருந்திய)

இமய வெற்பின் அண்டையிற் பெரிதாய்
இன்னும் உண்டதன் பேர்?சோழன் கணவாய்!
தமை மறந்து பகைவர் புகுந்தனர்
தாய்மார் மக்களைப் போருக் கனுப்புக! (அருந்திய)

★Chola Range ?Chola Pass

சோலை ஆடல் அரங்கு!

விட்டுவிட்டுக் குழல் ஊதும்
மெட்டு வைத்துக் குயில் பாடும்
வட்டாரச் சோலையிலே
மாமயில் ஆடும் - நல்ல
மரங்கொத்தி அரங்கத்தில்
தாளங்கள் போடும்.

கட்டுக்கரை அலை மோதும்
காதினிக்கும் ஒரு மேளம்!
தட்டாமல் ஒத்தூதும்
தாமரை வண்டு - நல்ல
சிட்டுச் சலங்கை போடும்
ஒத்தாசை கண்டு.

வெள்ளைப் பட்டுப் பெடை அன்னம்
வீறுர்ப்பு நடை அன்னம்
உள்ளோடு லாவையிலே
ஒட்டாரக் கிள்ளை - நல்ல
ஒழுங்குபேசிக் கொண்டிருக்கும்
ஓயாத பிள்ளை.

கொள்ளை கொள்ளை கொடிமுல்லை
கோத்தமுத்தும் இணையில்லை
கள்ளொழுகும் உதடு காட்டிச்
சிரித்தாள் ஒருத்தி - அவள்
காட்சியெலாம் கண்டிருந்த
ஓர்செம் பருத்தி!

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

சிங்கம்

இது, ஹிம்ஸ என்ற வடசொல்லின் சிதைவாம். ஹிம்ஸ என்பது சிம்ஹ என்றுகிப் பின் சிங்கம் என்று ஆயிற்றும். இவ்வாறு வடவர் கூறுவதோடு தமிழ்ப் புலவர் சிலரும் கூறுகின்றுர்கள்.

சிலப்பதிகாரப் பதிகம் 47-ம் அடியில்

சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்து

என்றதை உற்றுநோக்குவார்க்கு உண்மை புலப்படாமற் போகாது.

இதுமட்டுமல்ல, கம்பராமாயணம் நாடு விட்ட படலம் 40-ம் செய்யுளாகிய

சிங்கல் இல் கூதாலி

என்பதையும் நோக்குக. தமிழ்ச்செய்யுள்களில் பல இடங்களில் இவ்வாறு வந்துள்ளதென்பது தமிழறிந்தார் அறியாததன்று.

சிங்கல் - கெடுதல் என்பது பொருள்.

எனவே பிற உயிர்கட்குக் கேடுசூழ்வது அதனுல் தானும் கெடுவது சிங்கம் என்ருயிற்று உயிர்நூற்புலவரும் சிங்கம் இந்நாட்டிலும், பிற நாட்டிலும் இல்லாது குறைந்து வருவதற்குக் காரணம் பிற உயிரை அரிப்பதுதான் என்று கூறுவார்கள். சிங்கத்திற்கு அரிமா எனவும் பெயருண்டு. சிங்கல் சிங்கத்திற்கு ஆனது ஆகுபெயர்.

எனவே சிங்கம் தூய தமிழ்ச்சொல்லே என்க.

வரம்

வரல் என்பது ஈறுதிரிந்த தொழிற் பெயராய் வருதலுற்ற பொருளைக் குறிக்கும். இந்த வரல் என்பது வரத்து என்றும் வழங்கும். அதனுலன்றே கம்பராமாயணம் ஆரணிய காண்டம் விராதன் வதைப்படலம் 22-ம் செய்யுளில்

வரத்தின் - வருதலினுல் என்று பொருள் கொண்டதும் என்க.

எனவே வரம் என்பது தூயதமிழ்ச் சொல்லே என்று கடைப்பிடிக்க.

∝○★○∝

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௯ கார்த்திகை ௧௭

பெருவானில் முழு நிலவு.

26-11-58ல் சிதம்பரத்தில், மூன்று பெருங்கூட்டங்கள் நடந்தன. காலையில் இரத்தின டாக்கீசில் சாதி ஒழிப்பு மாநாடு நடந்தது. மாலையில் சுதந்திரத் தமிழக மாநாடு நடந்தது. மாலை 7 மணி தொடங்கி, அண்ணாமலை நகர் தி. க. மாணவர் கழகச்சார்பில் பெரியாருக்கு வெள்ளிவாள் பரிசளிப்புக் கூட்டம் நடந்தது நகரமன்றப் பெருவெளியில்!

இம் மூன்று கூட்டங்களிலும். மக்கள் உள்ளத்தை உள்ளபடி உணரவல்ல பெரியார் பேசினார்: திராவிடர் கழகத்தின் தலைவர் திரு. தி. பொ. வேதாசலனார் பேசினார். மற்றும் முன் மொழிதல் வாயிலாகவும் வழிமொழிதல் வாயிலாகவும் அறிஞர் மிகப் பலர் பேசினார்கள் பேச்சாளராகவும் மிகப்பலர் பேசினார்கள். மக்கள் பெருவானில் முழுநிலவைக் கண்டார்கள்,

கட்சிகள் எனப்பல இந்த நாட்டில். அக்கட்சிகள் சொல்லுவன பல. எதிரிகள் பலர் அவர்கள் காட்டும் பூச்சாண்டிகள் பல. ஆள்வோர் பலர். அவர்கள்விடும் கரடிகள் மிகப்பல, இதனால் தமிழ்வான் இருளாகத் தோற்றமளித்தது.

இருள் எங்கே? பெருவானில் முழுநிலவைக் கண்டார்கள் அன்று மக்கள்!

தமிழ் நாட்டில், ஒரு கொள்கைதான் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. "தமிழ்நாடு விடுதலை பெறவேண்டும்!"

இந்த ஒளிநிலவின் முன். எந்த இருளும் முன்னிற்கவில்லை.

பட்டி தொட்டிகளிலெல்லாம் மக்கட் கடலைக் கண்டு கண்டு. பேசிப் பேசி அவர்கள் உள்ளப்பாங்கை அறிந்தாராகிய பேரறிவாளர் பெரியார் பேச்சிலிருந்தும் மற்ற அறிஞர் பேச்சிலிருந்தும் அன்று மக்கள் கண்ட உண்மை இதுதான்.

தமிழ்நாட்டை மீட்பதற்கான போர்த் துவக்கமாக நடைபெறவிருக்கும் பட எரிப்புக் கிளர்ச்சியில் கலந்துகொள்ளவிருக்கும் தமிழர் பட்டாளத்தாரின் தொகை மிகப் பெரிது என்று குறிப்பிட்டார் பெரியார்.

அடுத்தபடியாக அவர். ஆளவந்தாரும், வடக்கரும் பார்ப்பனரும் தம் நலங்கருதித்தக்கவாறு தம்மைத் திருத்திக் கொள்வது நல்லது என்றும் குறிப்பிட்டார். கண்ணீர்த்துளி, முதலிய கட்சிகள் மக்கள் மனநிலையறியாது அவர்களை ஏமாற்றிப் பிழைப்பதிலேயே பெருநாட்டம் கொண்டிருப்பதாகவும் விளக்கியுதவினார்.

நாம் கூறுவதும் அதுதான். ஆயினும் சிறிது வேறுபாடு உண்டு.

கட்சித் தலைவர் திருந்தப்போவதில்லை. மக்கள் இந்தக் கிளர்ச்சிக்கு எதிர்ப்பாக இரார். ஆளவந்தார் உள்ளந் திருந்துவார். மேலுக்குத் திருந்தார். அவர்களின் வாக்காளர் நமக்கு ஆதரவாகவே இருப்பார்கள் பார்ப்பனர் திருந்தார். பார்ப்பனனுக்குப் பிறந்தவர்கள் திருந்தமாட்டார்கள் எனவே சில தனியன்கள் தவிரத் தமிழர்கள் என்ற பரந்த வானில் தமிழ்நாடு மீளவேண்டும் என்றமுழுநிலவே தோற்றமளிக்கின்றது! வெல்க தமிழ்நாடு.

சிற்றம்பலத்தில் முப்பெருமுழக்கம்

26-11-58 காலை, சிதம்பரம் இரத்தினு டாக்கீசில் தலைவர் வேதாசலனுர் தலைமையில் சாதி ஒழிப்பு மாநாடு நடைபெற்றது: மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசிய சிவ கங்கை வழக்கறிஞர் திரு. ஆ. சண்முகநாதன் B. A. B. L., அவர்கள் திராவிட கழகத்தின் இன்றைய நிலை, அதன் போர் ஆயத்தம், திரா விடர் (தமிழர்)களின் கடமை முதலியவை பற்றி மிக அழகாக -- அனைவரும் உணர்வு கொள்ளுமாறு பேசினுர்கள்.

அடுத்தபடியாக, தலைவர் வேதாசலனுர் மாநாட்டின் தலைவராக, முன்மொழிந்தும், வழி மொழிந்தும் அறிஞர் பலர் பேசி முடித்தபின் ஷி வேதாசலனுர் அறியதொரு தலைமையுரை நிகழ்த்தினுர்கள். இந்த நாவலந்தீவின் முதற்குடி மக்களாகிய தமிழர்களைச் சூத்திரர் என்றும் அச் சூத்திரர்களை இன்னின்ன வகையில் துன் புறுத்தித் தொலைக்க வேண்டுமென்றும், ஐத்ரேயம் முதலிய உப நிடதங்களில் கூறி யுள்ளதை விரிவாக எடுத்துக்கூறிய திறம் வியத் தற்குரியதா யிருந்தது. இந்நாட்டில் சாதி ஒழிய வேண்டும் இல்லையேல் நாமே ஒழிந்துபோக வேண்டும் என்றுகூறி - சாதி ஒழிப்பின் இன்றி யமையாமையை வேதாசலனுர் விளக்கிமுடித் தார்கள். அறிஞர்பலர் சொற்பெருக்கின் பின்னர் பெரியார் சொற்பெருக்கு மக்களின் உள்ளத் தைக் கொள்ளை கொண்டது.

இரத்தினு டாக்கீசு மக்களைத் தாங்கமாட் டாமல் உடல் நெளிந்தது. மாலை நிகழ்ச்சி 2-30 மணிக்கெனக் கூறிக் காலை நிகழ்ச்சி நடுப்பகல் 1 மணிக்கு முடிவுற்றது.

இந் நிகழ்ச்சியில் குறிப்பிடத்தக்க சொற் பொழிவாக அமைந்தது நடிகவேள் M. R. ராதா அவர்களின் பேச்சாகும்.

சுதந்திரத் தமிழக மாநாடு.

மாலை 2-30 மணிக்கெல்லாம் இரத்தினு டாக்கீசில் மக்கள் கடலென நிறைந்துவிட்டார் கள் மாநாட்டுத் திறப்பாளர் திரு. சி. பா. ஆதித்தனுர் பார்-அட்லா. வரக் காலம் தாழ்ந்த தால் அப்பணியை திருக்குறள் முனிசாமி ஆற்றினுர்.

அறிஞர் பலரின் முன்மொழிதலும் வழி மொழிதலும் முடிந்தபின் பாவேந்தர் தலைமை யுரை பகர்ந்தார்.

அதில் குறிப்பிடத்தக்க பகுதி வருமாறு: மனிதன், விலங்கு பறவைகளினும் உயர்ந்தவன் எனில் காரணம், மனிதன் மொழியுடையவன் என்பதுதான். விலங்குகள் பறவைகளுக்கு மொழியில்லை ஆதலால் அவைகள் மனிதனை விடத் தாழ்ந்தவைகள்.

மனிதன் பகுத்தறிவுடையவன் அதாவது மன அறிவு உடையவன் என்று கூறுவார்கள். இவ்வாறு மேலெழுந்த வாரியாகக் கூறுவதால் பயனில்லை. ஏனெனில், விலங்கு பறவைகளுக் கும் மன அறிவு அதாவது பகுத்தறிவு உண்டு.

ஆயினும் விலங்கு பறவைகளுக்கு மன அறிவு அதாவது பகுத்தறிவு மலர்ச்சியடைய வில்லை ஏனென்ருல், அவைகளுக்கு மொழி யில்லை. மனிதனுக்கு மொழியே பகுத்தறிவை மலரச்செய்தது. அதாவது மனிதனுக்கு மொழி தான் மன அறிவை மலர்ச்சியடையச் செய்தது

மொழிப்பயன் இது மட்டுமல்ல; மொழி யானது இனத்தைச் செய்கின்றது. தனி மனித னுல் ஆகாததை இனம் ஆக்கிவிடும். ஆதலால் இனம் என்பது தனி மனிதனுக்கு உறுதுணை யாவது என்று அறிதல் வேண்டும்.

இன்னும் மொழியானது மனிதனுக்குப் புகழைச் சேர்க்கும். செல்வத்தைச் சேர்க்கும் அவனுடைய வரலாற்றை நிலை நிறுத்தும்.

மொழி என்பது, பேச்சும் எழுத்தும் ஆகும். இதன் வளர்ச்சியைத்தான் இலக்கியம் என்பார்கள். மொழியானது வளரும் இயற்கை யுடையது.

தமிழனுக்குத் தமிழ்மொழி தமிழன் தோன்றிய நாளில் தோன்றியது எனின், தமிழன் தோன்றியது. மக்கள் தோற்றத்தின் முதற்பகுதி என அறிதல் வேண்டும் எனவே தமிழ்மொழி முதன்மையானது.

தமிழனுக்கு எல்லாம் செய்தது தமிழ் ஆனமை தெரிந்தே தமிழனைத் தொலைக்கத் தமிழைத் தொலைக்க வழிதேடுகின்றனர் வடக்கர்.

தமிழனுக்குள்ள தமிழ்ப்பற்றை வேரறுக்க வேண்டும். அதற்காகத் தமிழ் இலக்கியமும் தமிழும் தனிமொழியல்ல அவை வடவர்மொழியாகிய ஆரியத்தின் பிள்ளை என்று ஒரு வாய்ப்பட்டதுபோல் கூறி வருகின்றார்கள். இதன் பொருட்டு. வடவருக்குப் பெரும்பொருள் அளவில் செலவிட்டு வருகின்றார்கள்.

இந்தியை மிக முயன்று தமிழ் நாட்டில் புகுத்துவதும் இதன் பொருட்டேயாகும்.

திராவிட மொழி ஆராய்ச்சியின் பேரால் மீனாட்சிசுந்தரம், சேது ஆகிய இரு பிள்ளைகளையும் வடவர் ஆளாக்கி, தமிழை ஒழித்துவருவது இதற்குத்தான்.

தமிழ்நாடு மீட்சி அடைய வேண்டும் என்பதற்குக் காரணம் ஆண்டு ஒன்றுக்கு 66 கோடி அயலார் கொண்டு போவதுமட்டுமல்ல; அயலார் நம்மொழியை ஒழிக்கத் தொடங்கி - அம்முயற்சியை விடாது செய்து வருகின்றார்கள் என்பதுதான் முதன்மையான காரணம் என்று உணரவேண்டும்.

தமிழ் கொல்லப்பட்டால் தமிழினமே கொல்லப்பட்டதாகிவிடும் என்பதுதான் தில்லியின் முடிந்த எண்ணம்.

இதற்கோர் எடுத்துக்காட்டு: மோரீசில் உள்ள தமிழர்களிடமிருந்து. பிரஞ்சுகாரரால் தமிழ்மொழி முற்றும் பறிக்கப்பட்டு விட்டதால் அங்கு அவர்கள் நிலை கவலைக்கிடமாயிற்று. அவர்கள் தம்மைத் தமிழர் என்றும் சொல்லிக் கொள்ளத் தெரியவில்லை. நீங்கள தமிழர்கள் என்று சொல்லுகின்றவர்களையும் அவர்கள் சீறுகின்றார்கள்.

ஆதலால் தமிழைக் காக்க வேண்டும் தமிழை மீட்க வேண்டும் தமிழ் நாட்டை மீட்க வேண்டும்.

இப்போது இன்னுமொரு புதியசெய்தி வெளிவந்து கொண்டிருக்கிறது. இத்தனை நாள் பார்ப்பானை எதிர்த்த கட்சிபானது இன்று பாப்பானை ஆதரித்து வருவதற்குக் காரணம் வடவர் கரவில் தரும் பணந்தான் என்றும் இனி அவர்கள் தமிழை எதிர்த்து ஒழிக்கும் புண்ணியச் செயலில் ஈடுபடத் தயங்கப் போவதில்லை என்பதும் ஆகும்.

இவ்வாறு தமிழை ஒழித்துக்கட்ட வடவர் செய்யும் பெருமுயற்சிபற்றி எனக்குமேல் நாட்டின்வழியாகவே கிடைக்கின்றது இனியும் கிடைக்கும்! என்று பேசி முடித்தார்.

மருத்துவப் பகுதி

சென்ற இதழ்த் தொடர்ச்சி

அடுத்த இதழில்

வரும்.

அதன் பிறகு ஆதித்தனர் வந்துவிட்டதால் அவரைச் சொற்பெருக்காற்றுமாறு கேட்டுக் கொள்ள அவரும் தமிழ்நாடு பிரியவேண்டும் என்பதற்கான காரணங்களை நன்ருக விளக்கினர்.

அதன்பிறகு திரு. வீரமணி M. A., திரு. சனர்த்தனம் M. A., முதலியவர்கள் பேசினர்கள் கடைசியாகப் பெரியார் சொற்பெருக்காற்றியருளினர்கள்.

இரத்தின டாக்கிசில் மாலைக்காட்சி தொடங்க வேண்டியதிருந்ததால் 6 மணிக்கெல்லாம் சுதந்திரத் தமிழக மாநாடு இனிது நிறைவேறிற்று.

தீர்மான விவரம், பெரியார் சொற்பொழிவு முதலியவற்றை விடுதலையில் விரிவாகக்காண்க.

<★>

பெரியாருக்கு வெள்ளிவாள் பரிசளிப்புப் பொதுக்கூட்டம்.

அன்று மாலை (26-11-58) சிதம்பர நகரத்தின் மேற்புறத்து அமைந்த இரத்தின டாக்கிசினின்று ஊர்வலம் கிளம்பியது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களின் தொகை இருபதாயிரம் ஆகும். பெரியதொரு பொறியியக்கு (கார்) வண்டியில் பெரியாரும், புரட்சிப் பாவேந்தரும் அமர்ந்திருந்தார்கள். கூட்ட நடுவில் சிலம்ப விளையாட்டும், பல்லிசை முழக்கமும் பெருஞ்சிறப்பை உண்டாக்கின. திராவிடர் கழகக் கொடிகள் வானை மறைத்தன. ஊர்வலம் செல்லும்போதே, மூன்று இடங்களில் திராவிடர் கழகக் கொடிகளை ஏற்றிவைத்தார்கள், வழி நெடுக ஊர்வத்தை நிறுத்திப் பெரியாருக்கு மாலைகளும், துண்டுகளும் அளித்தது பெரியார் கொள்கையில் சிதம்பரம் மூழ்கிவிட்டது என்பதைத் தெரிவித்தது.

ஊர்வல மக்கட்கடல் சரியாக 7-15 மணியளவில் நகர மன்றத்தின் பெருந்திடல் போய்ச் சேர்ந்தது. இத்தனை பெரிய கூட்டத்திற்குத் திடலில் இடம் சரியாய்விடும் என்று எண்ணப்பட்டது ஆனல் இக்கூட்டம் போய்ச் சேருமுன் திடலை நிரப்பி, சூழ்ந்திருந்த மாடிகளை நிரப்பி, மரக்கிளைகளையும் நிரப்பியிருந்தார்கள் மக்கள். ஊர்வல மக்கள் கடலும் போய்ச் சேரவே கண்ணுக்கெட்டும் அளவு பெருவெளி எள்விழ இடமின்றி மக்களால் அடர்ந்து காட்சியளித்தது.

ஊர்வல ஊர்தி விட்டு இறங்கிய பெரியார். மக்கள் நெருக்கத்தைப் பிளந்துகொண்டு மேடையை அடையப் பெரும்பாடு படவேண்டியதாய்விட்டது.

பெரியாருக்கு வெள்ளிவாள் பரிசளிப்புக்காக, அண்ணமலை நகர் திராவிட மாணவர்களால் கூட்டப்பட்ட இம்மாபெருங் கூட்டமானது, சில பிற்போக்குக் கட்சிக்காரர்களைத் திடுக்கிடச் செய்துவிட்டதோடு, மாணவர் உலகில் புகுந்து, பன்னளாகத் தொண்டாற்றிவரும் டார்ப்பிடோ சனர்த்தனம் M. A. அவர்களின் செயல் திறத்தையும் வெளியாக்கிவிட்டது.

கூட்டம் புரட்சிப் பாவேந்தர் தலைமையில் தொடங்கியது. மாணவர் கழகச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் முன்மொழிய, அறிஞர் பலர் வழிமொழிந்தார்கள்.

தலைவரின் தலைமையுரைக்குப்பின், திரு. வீரமணி எம். ஏ. சனர்த்தனம் எம். ஏ. வழக்கறிஞர் சண்முகநாதன் பி. ஏ. பி. எல். பேசினர்கள்.

அதன்பிறகு மாணவர் சார்பில் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள், பெரியார் அவர்கட்கு வெள்ளியாற் செய்த பெரியதோர் வாளைத்தூக்கி இருகையாலும் அளித்துப் பெருமைபெற்ருர்.

அதையடுத்து, சனர்த்தனம், ஈ. வே. ரா. மணியம்மையார் தென்னுற்காடு மாவட்டச் செயலாளர் கிருட்டினசாமி ஆகியோர்க்கும் வெள்ளிப் பதக்கங்களை அளித்து மகிழ்ந்தார்.

இதைப் பற்றிப் புரட்சிப் பாவேந்தர் பேசுகையில்,

பிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கஎ தொடர்ச்சி

படைத்தலைவர் பரூஉத் தலையார் வீட்டின் மாடியினின்று நள்ளிரவில் நூலேணி வழியாக ஷி பரூஉத் தலையார் மகளான மணியிடையும், கோப்பெருஞ்சோழன் மகனான இளங்கோச் சோழனும்கீழிறங்கினார்கள். அவர்கள் நூலேணியை அப்படியே தொங்கவிட்டு அண்மையில் நிற்கும் குதிரையை விரைந்தோடி அதன்மேல் இருவரும் ஏறக், குதிரை விரைகின்றது.

காட்சி கஅ

இடம்: படைத்தலைவர் பரூஉத் தலையார் வீட்டின் வெளிப்புறம்.

உறுப்பினர்: படைத்தலைவர் பரூஉத்தலையார் ஷியார் மனைவி, ஆட்கள், மணியிடை, இளங்கோச்சோழன்.

காட்சித் தலைப்பு:

அண்டியூர்ச் சாலை

நிகழ்ச்சி: படைத்தலைவர் பரூஉத் தலையாரும் ஆட்கள் இருவரும் குதிரையில் வருகின்றார்கள் படைத்தலைவர் வீடு நோக்கி. நூலேணி தொங்குவதைப் படைத்தலைவர் பார்க்கிறார். மூவரும் குதிரைவிட்டு இறங்குகின்றார்கள்.

வாள் வெட்டுவது துணிப்பது ஆகியவேலையைச்செய்வது. வடவர்க்குத் தமிழகத்தின்மேல் இருக்கும் தொடர்பை வெட்டுபவர் பெரியார் தாம்! இதன் அறிகுறியாகவே, மாணவர்கள் பெரியார் அவர்கட்கு இந்த வெள்ளி நெடு வாளைப் பரிசாக்கி உயர்ந்தார்கள். பெரியார் வாழ்க! மாணவர் வாழ்க!

சனார்த்தனம் இந்த இயக்கதிற்கென வாழ்நாட்களைச் செலவிட்டு வருகின்றவர். படாடோபம் இல்லாமல் தொண்டாற்றும் செயல்வீரர். தன்னலங் கருதாதவர் ஆதலால் அவர்கட்டுப் பதக்கம் அளித்தது மிக்கப் பொருத்தமாகும்.

தெ. ஆ. மா. தலைவர் கிருட்டினசாமி, தம் தலைமைப் பொறுப்பை நேரியமுறையில் நடத்திச்செல்பவர். அவரைத் தாழ்த்தவேண்டும் இவரை உயர்த்த வேண்டும் என்ற மனக் கோட்டம் சிறிதும் இல்லாமல் பொதுநலம் கருதியே தொண்டாற்றும் ஆற்றல் உடையவர் அவர்க்குப் பதக்கம் அளித்தது பொருத்தமே யாகும். என்று கூறி, பெரியார் அவர்களைப் பேசக் கேட்டுக்கொண்டார்.

பெரியார் ஏறத்தாழ இரண்டுமணி நேரம் பேசியதில் வியப்பொன்றுமில்லை. அத்தனை பெரிய கூட்டமும் ஆடாமல் அசையாமல் மூச்சுத்தான் இருந்ததோ இல்லையோ என்னும்படி இருந்து கருத்தாகக் கேட்டதுதான் வியப்பு! காரணம் என்னவாய் இருக்கலாம்? பெரியார் அவர்களின் சொல் ஒவ்வொன்றும் சுவையான கருத்தைக் கொண்டிருந்ததுதான் என்க.

காலைமுதல் இரவு 10–30 மணி வரைக்கும் மக்கள் அடைந்த முப்பெரு முழக்கமும் பெருமக்களுக்குப் பெரும்பயனை விளைத்து விட்டது.

இவ்வாறெல்லாம் முன்னின்று முயன்ற தெ. ஆ. மா. தலைவர் கிருட்டினசாமி அவர்கட்கும், மாணவர் தலைவர் சனார்த்தனம் பால சுப்பிரமணியம், இரா. கோபால கிருட்டினன், ம. சச்சிதானந்தம் அ. பாலகிருட்டினன், மு. இராமசாமி முதலியவர்கட்குச் சிதம்பரம் கடமைப் பட்டதாகும்.

வாழ்க தமிழ். வெல்க தமிழ்நாடு!

(கண்டெழுதுவோம்.)

படைத்தலைவர்: நூலேணி! என் மகளை, இளங்கோச்சோழன் கொண்டு போனான்!

(இதற்குள் படைத்தலைவன் மனைவி வெளி வருதல்)

மனைவி: மாடியில் மகளில்லை. வீட்டில் எங்கும் பார்த்தேன் இல்லையே!

படைத்தலைவர்: வருந்தாதே இளங்கோச் சோழன் செய்தவேலை. போவோம் அண்டியூர்ச் சாலை வழியாக.

(மூன்று குதிரைகளும் பறந்தன)

படைத்தலைவர்: (குதிரை மீதிருந்தபடி) அதோ இளங்கோச்சோழன்! அதோ மணியிடை!

(குதிரைகள் முன்னேக்கித் தாவுகின்றன. இளங்கோச்சோழன் குதிரையும் முன்னேறு கின்றது.)

மணியிடை: (குதிரைமேல் இருந்தபடியே) குதிரை நிற்கட்டும். நான் என் தந்தையிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

இளங்கோச்சோழன்: இப்போது தப்பவழி பார்க்க வேண்டும். மன்னிப்புக் கேட்பது பின்னுக்கு ஆகட்டும்.

(இளங்கோச்சோழன் குதிரை ஓர் ஆலின் பின்புறம் மறைகின்றது. படைத்தலைவன் குதிரை நேரே செல்லுகிறது)

படைத்தலைவர்: குதிரை காணப்படவில்லை. இடையில் எங்கேனும் மறைந்துகொண்டிருக்க வேண்டும்.

(குதிரைகள் பின் நோக்குகின்றன)

ஆள் க: இதோ!

(படைத்தலைவரும், ஆட்களும் நெருங்கு வது கண்ட இளங்கோச்சோழன் வாளை உருவுகின்றான். படைத்தலைவனும் வாளை உருவுகின்றான்)

மணியிடை: (இளங்கோச்சோழனின் வாளைப் பிடித்தபடி) எலிக்குஞ்சால் யானையை எதிர்க்க முடியுமா? உறையிற் போடுங்கள் வாளை! அப்பா மன்னிக்கவேண்டும் என்னை. வாள் உருவிய இளவரசையும் மன்னிக்க வேண்டும்.

படைத்தலைவர்: அன்பு முறையில் நீ இள வரசரோடு வந்தாயா? வன்பு முறையில் அவர் உன்னைக் கொண்டு வந்தாரா?

மணியிடை: நானே அவரோடு வந்தேன் என் வாழ்க்கைத் துணைவர் அவர் ஆதலால்.

படைத்தலைவர்: நல்ல துணைவர்தாமா அவர்? ஆராய்ந்தாயா?

மணியிடை: எல்லாம் உடையவர். அதில் என்ன ஐயம் அப்பா?

படைத்தலைவர்: அறிவுடையார் எல்லாம் உடையார் அதுதான் இளவரசரிடம் இல்லை. அவரிடம் இருக்கின்றது என்றால் அது அச்சந் தான். என்னைக்கண்டதும் வாளை உருவுகின்றார். அறிவுமில்லை, ஆண்மையும் இல்லையே.

இளங்கோச்சோழன்: மாமா நீங்கள் எனக்கு இருக்கின்றீர்கள். அதனால் எனக்கு எல்லாம் இருக்கின்றன. நான் இனி எவர்க்கும் அஞ்ச வேண்டியதில்லை. நான் உங்கள்பால் தவறிழைத் தேன் நீங்கள் மன்னிக்கவேண்டும்.

எனக்கு நீங்கள் ஒருவரம் அளிக்க வேண்டும். என் தந்தை முடிதுறக்கவேண்டும். நீங்கள் அரசாள வேண்டும். நான் படைத்தலை வனாக- விளங்கவேண்டும். உங்கள் முழுதுதவி வேண்டும்.

படைத்தலைவர்: உன் உள்ளத்தில் மறைந்து கிடந்தது இதுதானா! இளவரசே, நல்ல எண்ண மல்ல இது! தந்தையின் புகழ் உலகத்தினை பெரிது. அவரின் நல்லாட்சி உலகால் பாராட்டப் படுகின்றது. அதுமட்டுமன்றி, அவரிடமிருந்து ஆட்சியைப் பறிப்பேனானால், என்னை உலகம் தூற்றும் மகளை இளவரசுக்குக் கொடுத்தான் ஆட்சியைத் தான் கைப்பற்றினான் என்று சொல்லும்படி நான் நடந்து கொள்ள வேண்டுமா?

மணியிடை: ஆதலால், ஆட்சியை இள வரசுக்கே ஆக்கிவிடலாமே அப்பா!

இளங்கோச்சோழன்: என்னை அரசனாக்கிய பின் நான் மணியிடையை மணந்து கொள்ளு கின்றேன். அதுவரை எங்கள் தொடர்பு பிறர்

கேள்விக்கினியர் நாம்!

— காமீ. சுந்தரன் —

உறங்கிய மக்கள் வாழ்வில் இன்றோர் விழிப் புணர்ச்சி தோன்றியுள்ளது. அவர்தம் நினைப்பில் நல்லதோர் மாறுதலைக் காண்கிறோம். 'வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சிவேண்டும், விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்' என்ற நம்உரிமை முழக்கம் தமிழ் நாட்டார் உள்ளங்களிலெல்லாம் விள்ள ஒலிக்கத் தொடங்கிவிட்டது. பட்டி தொட்டி களிலெல்லாம் தமிழக விடுதலைப் பரணி. நாடு நகரெங்கும் தாயக அடிமைபோக்க விடுதலைப்போர்க் கொடிகள் உயர்த்தப் பெறுகின்றன. வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துலங்கும் நம் தலைவர் தந்தை பெரியாரின்கீழ்ப் பணியாற்ற ஒன்றாய்ப் பலவாய் ஊர்தோறும் இளைஞர்படை ஒருங்கு திரளுவதைக் காண்கிறோம். எது செய்ய நாட்டுக்கே எனத் துடிக்கும் இச் சிங்கங்களின் அணிவகுப்புக் கண்டு உள்ளம் உவகை பூக்கின்றது; தோள்கள் பெரு மிதத்தால் பூரிக்கின்றன.

இது ஒரு புறம், மற்றோர் புறத்தே கல்லூரி களில் கற்கின்ற இளைஞர் சிலர் இவ்வாறு கூறக் கேட்கிறோம்: "என்னப்பா, திராவிடர் கழகம்? படித்தோர் குறைவு பட்டதாரிகள் சிலர்! பட்டுடை பூண்டோர் அதனிலும் மிகச்சிலர்! கொளுத்தலும் எரித்தலுமே கொள்கைகள். கூட்டம் போட்டாலோ சுவையான பேச்சுண்டா, சூத்திரன் என்ற நிலை பற்றிக் கூறுவதைத் தவிர? செவிக்கினிய இசை உண்டா? அல்லது தங்கள் வனப்பால் வண்ண ஆடைகளால் கூட்டத்தின் அழகு கூட்டி விழிகளுக்கு விருந்தூட்டும் பார்வையாளர்களாவது உண்டா? ஆடுகின்ற மேடை, உடைந்த நாற்காலி, ஒலி தவிர ஏனையவற்றையெல்லாம் பெருக்கிக் காட்டும் ஒலிபெருக்கி - இவைதமைக் கொண்டு கூட்டம் நடத்தினாலோ கேட்கின்ற மக்களில் பலர் அரைப் பட்டினி, அன்றாடங் காய்ச்சிகள் என்ற நிலையினர் சே சே! என்ன கட்சியப்பா அது!" என்று பேசக்கேட்கிறோம்.

உண்மைதான். நம்மிடத்திலே என்ன கவர்ச்சி இருக்கிறது, உண்மை என்ற கசப்பு மருந்தைத் தவிர? நமது மேடைகளிலே 'பாவாடை நாடா' வைப்பற்றியா பேசுகிறார்கள்? அது பற்றிப் பேசினால் சுவைக்கும் (?!) நமது தலைவர்களாவது பட்டம் பதவி பெற்று சட்டசபை சென்று மெத்தைத நாற்காலி யில் சுழலும் மின்விசிறிக் கடியில் அமரும் 'தகுதி' பெற்றிருக்கிறார்களா? இல்லையே! நமது இலட்சி யத்தைப் பரப்புகின்ற ஏடுகளாவது 'எழிலோடு விளங்குகின்றவா? வெறியூட்டும் ஓவியம் அல்லது பருவ மங்கையின் படம் இதனை முகப்பு அட்டை யாகக் கொண்டு வெளிவருகின்ற ஏதாவது ஓர் நாள், கிழமை திங்கள் ஏடு? நாம் பெற்றுள்ள தெல்லாம் விடுதலை, குயில், ஈரோட்டுப் பாதை இவ்வளவுதானே. எட்டியினும் கசப்பான உண்மை களைக் கொட்டுவன இவை 'பார்ப்பனர் சுரண்டும் இடங்கள் பாரீர்! நெய்வேலிக் கொள்ளையின் நீர்மை காணீர்! உங்கள் நெஞ்சம் கலங்கவில்லையா இந்நீதியற்ற செயல் கண்டு!' எனக் கூறுவன இவை. இவையா இனிக்கும் சுவைக்கும் இன்றைய இளைஞர் சிலர்க்கு!

இவ்வாறு புறச்சுவை நாடி சோம்பித் திரி வோர்க்குச் சங்கத் தமிழ் நிகழ்ச்சி ஒன்றைச் சாற்று கின்றோம். ஏனாதி திருக்கிள்ளி என்பான் பகைவ ரொடு போரிட்டான். விழுப்புண்ணேற்றான் வெற்றி பெற்றான், வெற்றிபெற்ற வேந்தனை வரவேற்க மக்கள் குழுமினர். காவலன் வந்தான். அவனைக் கண்ணுற்றோர் தம் விழிகள் கூசின. ஏன்? ஒளியின் மிகுதியாலா? அல்ல, அல்ல. புவியரசன் உடலிலே அத்துணை புண்கள். வெற்றிச் செல்வி விழைந் தளித்த முத்தத்தின் அழியா வடுக்கள் அவை.

அறியாதபடி இருக்கவேண்டும். மாமா, நல்ல இளம்பருவத்தை நான் துன்பத்தில் தொலைக்க வேண்டும். இந்த முதுபருவத்திலும் தந்தை முடிகழற்றக் கூடாது எனில், எங்கடுக்கும் இந்தக் கூத்து! அன்றியும் அரசர் நடந்து கொள்ளும் முறை எப்படி? வந்தார்க்கெல்லாம் வாரி வழங்குவது. விரும்பினோர்க்கெல்லாம் பெரும்படியாக எடுத்து வீசுவது! இவர் தம் இருபிள்ளைகளுக்கும் என்ன வைக்கப் போகின்றார்?

மணியிடை: அப்பா வீட்டுக்குப் போவோம் அம்மாவின் வருத்தத்தை தீர்க்கவேண்டும். ஆனால் ஒன்று உறுதி. என் துணைவர் முடிபுனைய வேண்டும். இல்லாவிடில் நான் உயிர்விடுவது தவிர்க்க முடியாதது.

(அனைவரும் போகின்றார்கள்)

அவன் அழகெல்லாம் பாழ், பாழ், பாழே! ஆயினும் வென்றனம் என்ற சொல், வெற்றி வீரர்கள் என்ற கூற்று செந்தமிழ்த் தேனாய்ச் செவிகளில் பாய வில்லையா? அதைத்தான் புலவர் மதுரைக் குமரனார் சொன்னார்: 'கிள்ளியே, புண்பல ஏற்றதால் நின் மேனி காணுதற்கு இனிமை பயப்பதல்ல. எனினும் பகைவனை வென்ற நின்செயல் கேட்டற்கு இனிது. நின்புகழ் சிந்தையெலாம் களிக்கச் செயும் செந் தேன். உன் பகைவரோ புறமுதுகிட்டு ஓடிப் பிழைத்தனர். எனவே அழகிய உடலுடையார் எனினும் அழுகிய சொல் பெற்றார் இகழ்வுற்றார்' என்று. (புறம் 167)

வரலாறு திரும்பும் என்பர். இங்கே அது உண்மையாகின்றது. களம்பல கண்டனர் திராவிடர் கழகத்தினர். செந்தமிழை அழிக்கவந்த இந்தியைத் துரத்திச் சிறை நண்ணினர்; வடு வேற்றனர். விலங்குருவல்ல தமிழர்க்கு இறை என்று, ஆனை முகத்தானை ஆயிரமாயிரம் ஊர்களில்போட்டுடைத் தனர். ஆரிய இராமனுக்கு அருமைத் தமிழகத்தில் இடமில்லை என்று கொளுத்தினர் இராமன் படத்தை. கல்லடியும் சொல்லடியும் பரிசாகக் கிடைத்தன. சாதிக்குச் சாவுமணியடிக்கச் சட்டத் தாள் எரித்தனர்; ஓராண்டு, இரண்டாண்டுகள் கடுங்காவல் தண்டனையேற்றனர். சிறை வாழ்வின் சின்னங்களான நோய்கள் பெற்றும் உடல் நலிந்தும் மெலிந்தும் வெளிவருகின்றனர். அடிக்கடி ஏற்கின்ற சிறை வாழ்வால் பொருள் வருவாய் கெடுகின்றது. வறுமையில் உழல்கின்றனர். அவர்கள் பார்வைக்கு இனியரல்லர்; எனினும் விடுதலைப் படை என்ற பட்டம், சாதிஒழிப்பு வீரர் என்ற விருது நமக்குச் செந்தேனாய் இனிக்கின்றது. நாம் கேள்விக்கினியர்!

இனப்போரில், நாட்டு விடுதலைப்பணியில் கெடுதலைச்செய்தவர்கள், புறமுதுகு காட்டியவர்கள், பட்டம் பதவி பெறச் சட்டசபை சென்றவர்களின் மேனி பகட்டானது; பேச்சு சுவையானது. ஆனால் 'சட்டசபைக்குச் செல்வோர் பட்டுப்பூச்சிகள், வெட்டுக்கிளிகள்' என்று அவர்கள் பெறும் சொல் [இ]ழிவானது, நாம் கண்டு இரங்கத்தக்கது.

எனவே தான் கண்ணைப் பறிக்கும் அரசியல் வாணவேடிக்கை கண்டு கருத்திழந்து நிற்கும் இளைஞர்க்கு நாமொன்றுசொல்வோம். "ஆரவாரம் கேட்டு அறிவை இழக்காதீர். வெளிப்பூச்சும் உதட் டசைவும் உங்களை ஏமாற்ற முயலுகின்றன. விழிப்பாயிருங்கள் விடுதலைப் பெரும்படையின் [ப]ட்டியலில் உங்கள் பெய்ரைப் பதிவுசெய்து [கொ]ள்ளுங்கள்!" என்று.

★ வெல்க விடுதலைப் படை! ★

எம் நாடு

ஈரோடு, குமணன்

திருநிறை தமிழகம் எமது – இன்பத்
தேன்மொழி தமிழோ அமுது
வருபகை மாய்த்திடும் நாடு – கெழுதிறல்
மறவர் வாழ்படை வீடு
அருளுடைப் புரவலர் மனைகள் – புலவர்
ஆற்றிடும் நலமிகு வினைகள்
தருநீர்த் தண்ணெழிற் சுனைகள் - இவை
தம்மில் மிக்கதெம் நாடு.

வானைக் கிழித்துயர் மலைகள் – அங்கே
வளர்மரத் தின்கனிக் குலைகள்
காணிற் சிரித்திடும் முல்லை – அங்கு
காட்சிகள் அழகின் கொல்லை
தேனைத் தருமலர்ப் பழனம் – அங்கே
செந்நெல் விளைந்திடும் கழனி
மீனைத் தருங்கடற் கரைகள் – ஆங்கே
மேவும் கப்பற் றுறைகள்.

போரினில் மறவர் திறனும் – தமிழ்ப்
புலவர் கவிதைத் திறமும்
ஏரினில் உழவர் பயனும் – புலி
இளைஞர் வீரச் செயலும்
தாரணி வேந்தர் அருளும் – திரை
தாண்டும் வணிகர் திருவும்
பாரினில் மிகவே பெற்றுப் - புகழ்ப்
பரப்பி வுயர்ந்ததெம் நாடு.

பாடும் அருவிக் கரையில் – கரும்பின்
பண்ணுறும் சோலைப் புறத்தில்
ஆடும் மயிலெனப் பெண்கள் - தம்
அகங்கவர் காளைய ரோடு
சாடும் விழியாற் பேசி – இன்பச்
செந்தமிழ் இதழைச் சேர்த்துக்
கூடும் காதலிற் சிறந்து – இன்பம்
கொழித்து நின்றதெம் நாடு.

நச்சினர்க்கு நஞ்சா? அமிழ்தா?

கயல்விழி

இயற்கையோடு ஒன்றி நின்று இயற்கையாய் வாழ்ந்த இனத்தின்கண் முகிழ்த்த முதல்மொழி தமிழ். எண்ணையும் எழுத்தையும் மண்ணுலகிற்கு முதன்முதலில் தந்த முதுமொழி தமிழ். அறம், பொருள், இன்பம், என்று முறையாகவகைப்படுத்தி வளர்க்கப்பட்டது தமிழ். அள்ளும் சுவைசேர் பண்ணும் கூத்தும் பெருகவளர்ந்தது தமிழ். இவ்வுலகின் கண் எங்ஙனும் காணமுடியாத அகம் புறம் எனப் பொருள் வகையால் பிரிந்து வளர்ந்தது தமிழ்.

அகம், புறம் எனப்பெயரிய இவ் விரண்டனுள் புறம் என்பது தறுகண்மையைப் பற்றிக் கிளந்தோதிச் செல்வது.

குழலையும் யாழையும் குழைத்தெடுத்து, குயிலொடு கிளியும் கூட்டி மழலையும் பிறவும் தந்து வடித்தெடுத்த புது மழலைச் சொல்லில், 'அத்தான்' என்றழைக்கும் அந்த ஆரணங்கு; அதைத் தொடர்ந்து என்புருகி அன்புபொங்க "ஆருயிரே" என மறுமொழிதரும் அந்த மாத்தமிழ் இளைஞனின் மாருகாதல் ஆகிய இவைபற்றிச் சுவை சொட்டும் சொல்லிலே தேனொழுகப் பாலொழுகத் தெளிந்த கனித் தீஞ்சுவையொழுக அங்கிங்கெனதபடி எங்கும் யாண்டும் கூறிச் செல்வது அகமெனப்படும்.

இந்த அகப்பொருள் பற்றிப் பாடப்பட்ட பாடல்கள் அனைத்தும், தலைவி கூறுதல் போலவும், தலைவன் கூறுதல் போலவும், தோழி கூறுவதுபோலவும், தோழன் கூறுவதுபோலவும், தாய் கூறுவது போலவும், வளர்ப்புத் தாய் கூறுவதுபோலவும், கண்டோர் கூறுவதுபோலவும் ஆகிய இம்முறையில் அமைந்து கிடக்கின்றன.

இவற்றுள் எவ்வெப்பொழுது தலைவன் வாயிலாகப் பாடுதல்வேண்டும் தலைவி வாயிலாகப் பாடுதல் வேண்டும்; இன்னும் மற்றவர்கள் வாயிலாகப் பாடுதல் வேண்டும் என்பதற்கு முறையான ஒரு வரம்புண்டு. இந்த வரம்புண்மைகள் அனைத்தையும் முந்து நூலாகிய தொல்காப்பியம் களவியலில் நன்கு கூறப்பட்டுள்ளது.

தலைவன் தன்னைப் பிரிந்து சென்றபொழுது, தன்னையே அவன் நினைத்துக் கொண்டிருப்பதை யறிந்த தலைவி அவனது பண்பு நலனைப்பற்றி ஏற்றி உரைக்கும் பொழுது தலைவி கூற்றுய் அமையும்;

தோழியானவள் தலைவனது பண்புகளை தொடுத்துக் கூறும்பொழுது "தோழி! நீ கூறும் பண்புகள் எல்லாவற்றைக் காட்டிலும் அவன் எனக்கு மிக இனியன்" என்று நிறுத்திக்கூறும் இடத்திலும் தலைவியின் கூற்று நிகழும்.

தனக்கு வேண்டுமளவு உரிமை ஈந்து சிறப்புச் செய்த தலைவன்மாட்டு அன்பு சுரக்கின்றபொழுதும் தலைவன் கூற்று நிகழும். இவைபோன்று இன்னும் பலபட வரும்.

"அவனறிவு ஆற்ற அறியும் ஆகலின்
ஏற்றற் கண்ணும் நிறுத்தற் கண்ணும்;
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின்
பெருமையில் திரியா அன்பின் கண்ணும்"

(தொல். பொருள்-147·)

என்பது தொல்காப்பியச் சூத்திரம்.

"அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின் ஏற்றற் கண்ணும்" என்ற தொடருக்கு உரையெழுதிய இளம்பூரணர் "தலைவனது நினைவைத் தலைவி மிக அறிவாளாகலின் அவனை யுயர்த்துக் கூறுதற் கண்ணும் தலைவி கூற்று நிகழும்" என்று உரை வகுக்கிருர்.

"நிறுத்தற் கண்ணும்" என்பதற்கு "தலைவனது பண்பினைத் தோழி கூறியவாற்ருல் தான் நிறுத்துக் கூறுதற் கண்ணும் கூற்று நிகழும்" என்றும்

"உரிமை கொடுத்த கிழவோன் பாங்கின் பெருமையில் திரியா "அன்பின் கண்ணும்" என்பதற்கு "தலைவிக்கு உரிமையைக் கொடுத்த கிழவோன் மாட்டும் பெருமையில் திரியா அன்பின் கண்ணும் கூற்று நிகழும்" என்று கூறுகிருர்.

இதுஇவ்வாறிருக்க வேதத்தையும் வேள்வியையும் வருணத்தையும் தம் உரையில் ஓயாது புகுத்தியிருக்கும் நச்சினர்க்கினியர் மேற்கண்ட தொடருக்குக் கூறியிருக்கும் உரையை ஈண்டுக் காணுதல் நலம்.

பருவ நலங்கனிந்து எழில் நலஞ்சிறந்து திகழும் நங்கையும் அடலேறுபோன்ற நம்பியும் பொதுவாகத் தம்முட்கூடி முயங்கி மயங்கி இன்பந் துய்த்து பின்னர்ப் பிரிந்துசென்ற வழி காதலி மாட்டு காதலன் நினைவும், காதலியினிடத்துக் காதலன் நினைவும் எழுதல் இயல்பான ஒரு செயல்.

''அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்'' என்ற தொடரில் உள்ள அறிவு என்பதற்கு தலைவனைப் பற்றிய நினைவு என்று கொள்ளுதலே ஏற்புடைத்து. இதுவே முதல் உரையாசிரிய ரான இளம்பூரணரின் கருத்தும் ஆகும்.

இனி அறிவு என்ற இடத்து தன் தலைவனிடத்துள்ள கல்வியறிவு, இயற்கையறிவு, பொது அறிவு ஆகிய பலவற்றைப் பற்றித் தெரிந்துள்ள தலைவனது அறிவை அறிந்த தலைவி எனவும் கொள்ளலாம்.

ஆனால் நேர்மையின் குணக்குன்றும் நச்சினார்க்கினியர் அவர்கள் இந்த அறிவு என்ற சொல்லுக்கு என்ன உரை கூறு கிறார் தெரியுமா?

''வேதத்தையும் தரும நூலையும் தலைவன் அறிந்த அறிவை தலைவி மிக அறியுமாகலின்''—இது நச்சினார்க்கினியரின் உரை,

அறிவெனில் வேதத்தைக் கற்பதுதான் அறிவா? அறத் தொடுபட்ட முத்தமிழ் நூல்களையும் பிறமொழி நூல்களையும் பழுதறக்கற்று முட்டறுத்து முழுமெய்யறிவினைப் பெறுவது அறிவாகாதா? அவ்வாறாயின் வேதத்தைக் கற்காதவர்கள் அறி வற்றவர்களா? மேலை நாடுகள் அனைத்திலும் தோன்றி வாழ்ந்து வீழ்ந்துசென்ற அறிவியற்றுறையில் கற்றுத்துறைபோய பெரியார் களது அறிவைஅறிவென ஒப்புக்கொள்ளக்கூடாதா? நச்சினார்க் கினியரின் கூற்றுப்படி கண்டால் சாக்ரடீசும், கன்பூசியசும் இன்ன பிற பேரறிஞர்களும் அறிவற்றவர்களா? சாக்ரடீஸ் இவர்களது வேதத்தைக் கற்றுத்தான் அறிஞரானாரா? கன்பூசி யசின் பேரறிவு இக்குள்ளநரிக் கூட்டத்தினரின் வேள்வியை விடாது பயின்றதால் ஏற்பட்ட விளைவா? அந்தோ! நச்சினார்க் கினியருக்கு நம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

சூத்திரத்தினுள் உள்ள அறிவு என்ற ஒரு பொதுவான சொல்லை வைத்துக் கொண்டு அந்தச் சொல்லின் மூலம் வேதத்தைக் கொணர்ந்து உரையில் புகுத்திய இந்த நச்சினார்க் கினியர் நந்தம் மரபினருக்கு நஞ்சா? அமிழ்தா?

ஏற்றற் கண்ணும் என்ற இடத்து, ''தலைவி தலைவனை உயர்த்திக் கூறும் பொழுது'' என்று நாம் மேலே பொருள் கண்டோம்.

இவ்வாறு பொருள் கூறினால் தமது வேள்வியையும் அந்தணரையும் புகுத்தமுடியாது எனக்கண்ட நச்சினார்க்கினியர் ''தலைவன் தனக்கு ஏற்றம் (அதாவது உயர்வு) கொடுத்த இடத்தும்'' என்று கூறுகிறார்.

(தொடரும்)

பட்டுப்பூச்சியும் சிலந்தியும்

வித்துவான், வை. மாணிக்கசாமி புதுவை.

பட்டுப் பூச்சி ஒன்றைச் - சிலந்தி
பார்த்துச் சொல்லும் ஓர்நாள்
''எட்டு நாளாய் நூற்றாய் - முழமோ
ஏழு கூட இல்லை
குட்டி ஆமை போல - வேலை
குந்திக் குந்திச் செய்தால்
மட்டி என்பார் மற்றோர் - சற்றும்
மதிப்பும் இல்லை அதனால்

ஐந்து நிமிடத் திற்குள் - நானும்
அழகாய்ப் பெரிய சுவரைச்
சந்து சிறிதும் இன்றி - வலையால்
சரியாய் மூடி விடுவேன்
குந்தி வீணே இருத்தல் - எங்கள்
குலத்து வழக்கம் இல்லை''
இந்தப் பேச்சைக் கேட்ட - பூச்சி
எதிர்த்துப் பதிலும் சொல்லும்: -

சொன்னாய் உண்மை நண்பா - நீயும்
செய்யும் நூலால் என்ன
நன்மை உண்டு சொல்வாய் - நன்றாய்
நானும் நூற்கும் பட்டுக்
கன்னியர்க்குச் சேலை — ஆகும்
காளை யர்க்கு வேட்டி
சொன்ன விலையைத் தந்து — வாங்கிச்
சுகமாய் உடுத்தி மகிழ்வர்

பின்னும் உன்றன் வலையைக்-கண்டால்
பிய்த்த ழிப்பர் அன்றோ!
இன்னும் சொல்வேன்''...என்று-பூச்சி
எடுத்த உடனே சிலந்தி
முன்னும் பின்னும் பார்த்து—வாயை
மூடிச் சென்ற தாமே
உன்னைத் தானே தம்பி! - இதனால்
உணர்ந்த உண்மை என்ன?

வாரீர்!

கோவை, அ. மாரிமுத்து,

பார்ப்பனர் என்றொரு கூட்டம் – அன்று
பைந்தமிழ் நாட்டினில் வந்து
சேர்த்திட்ட தொல்லைகள் பாரீர் – இன்றே
செந்தமிழ் காத்திட வாரீர்!

கல்லினை ஆண்டவன் என்பார் – தேங்காய்
கற்பூரம் வேண்டுமே என்பார்
நல்லவர் தந்தவர் என்பார் – மாற்றார்
நாத்திகர் தள்ளுவீர் என்பார்!

தந்திரம் மந்திரம் என்பார் – பெற்ற
தாயையும் ஏமாற்றும் கள்ளர்
வந்தவர் வாழ்ந்திட முன்பே – இங்கு
வாழ்ந்தவர் தாழ்வது நன்றோ!

நற்பெரி யாரெனும் சோலைக் – குயில்
நல்ல வழிகளைக் கூறும்
நற்றமிழ் நாட்டினர் வாரீர் – நம்
நாட்டு விடுதலை காண்போம்!

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8—50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து காசு) அஞ்சல் தலைகள் அனுப்புக.

விற்பனையாளர்க்கு...!

ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதிக்குள் பட்டியல் தொகையை கண்டிப்பாய் அனுப்பிவிட வேண்டும்.

அவ்வாறு அனுப்பாவிடில் அன்னார்க்கு "குயில்" அனுப்புவது நிறுத்தப்படும்.

தமிழ்நாடு வேண்டும்!

சூணம்பேடு, ஆ. வேணுகோபால்.

தனியின்பத் தமிழ்நாடு நமக்கு வேண்டும்
தமிழ்ஆட்சி மொழியாக அமைய வேண்டும்
இனிநமது தமிழ்நாட்டில் அயலார் எல்லாம்
இன்தமிழ்க்கே இன்னல்புரி யாமை வேண்டும்
பனிபோன்றே நமதின்னல் மறைய வேண்டும்
பார்ப்பாரின் மறைத்திமை ஒழிய வேண்டும்
கனிபோன்ற நம்தமிழைக் காக்க வேண்டும்
காத்துமே வளரமுயற் சிக்க வேண்டும்

வடநாட்டா ராட்சியிங்கே ஒழிய வேண்டும்
வண்டமிழர்ஆட்சி இவண் நிலவ வேண்டும்
திடமான நற்குறளைச் சட்ட மாக்கித்
தீங்கின்றித் தமிழ்ஆட்சி புரியல் வேண்டும்
விடம் என்று நற்றமிழை எண்ணுகின்ற
வீணர்களை நாட்டைவிட்டே ஒழிக்க வேண்டும்
படமெடுத்தே ஆடுகின்ற நாகம் போன்ற
பார்ப்பனரின் வாலாட்டம் மறைய வேண்டும்

அஞ்சல்கள் தமிழ்மொழியில் நடக்க வேண்டும்
அச்சகங்கள் அருந்தமிழில் இலங்க வேண்டும்
மிஞ்சாமல் நல்லாட்சி நடாத்த வேண்டும்
மின்னலைப்போல் சாதியெலாம் மறையவேண்டும்
பஞ்சியைப்போல் நாட்டினிலே பரந்தே ஓடும்
பார்ப்பனரின் சமக்கிருதம் ஒழிய வேண்டும்
கஞ்சிகமக் கில்லாமல் ஒழிந்த தேனும்
கண்ணியத்தில் தவறாமல் வாழ வேண்டும்.

குயில் வளர்ச்சிக்கு நன்கொடை

குயில் ஆதரவாளர், மாயூரம் அன்பர் ஒருவர் "குயில்" வளர்ச்சிக்காக ஆறு ரூபாய் பத்து புதுக்காசுகள் அனுப்பியுள்ளார் வரப்பெற்றோம். நன்றி!

அமைச்சர்.

மாங்காட்டு மறையவன் மாண்புடையனா?

வித்துவான், தா. குருசாமி.

பவகாரணி படிந்தாடுவீராயின் பவகாரணத்தால் பழம் பிறப்புணர்வீர்; மறையோன் இரண்டாவது உரை. இறந்தபிறப்பின் எய்திய பயனைப்பிறந்த பிறப்பில் காணாயோ நீ; கவுந்தியன் இரண்டாவது மறுப்பு.

இட்டசித்தி மூழ்கின் நினைப்பன கைகூடும்; மறையோனின் மூன்றாம் உரை. வாய்மையில் வழுவாமல் மன்னுயிர் ஓம்புவோர்க்கு யாவதும் உண்டோ எய்தா அரும் பொருள்?; கவுந்தியின் மூன்றாம் மறுப்பு.

இருவரின் வாதங்களையும் ஆயும்பொழுது நம் அறிவுக்கு உணவாக அமைந்திருப்பது கவுந்தியடிகளின் உரைகளேயாகும். மறையவனுரையை நோக்கும்பொழுது, அவன் தான்கொண்டொழுகும் சமய நெறிக்கு ஆள்சேர்ப்பவனாக இருக்கவேண்டும்; அல்லது கபடமற்ற (?) ஆய்வுணர்வற்ற தன்மையனாக இருந்திருத்தல் வேண்டும், கல்வி கேள்வி ஒழுக்கம் இம்மூன்றிலுந்துறைபோயகவுந்தியடிகளின் முன் சமயக் கட்டுப்பொய்க்கதைகளை மறையவன் உளறுவதிலிருந்தே, யார் யாரிடம் எவ்வாறு பேச வேண்டும் என்ற சொல்லாற்றலுடையவனாகவும் இல்லை. மறையவன் வெறுஞ் சமயப் பற்றுளனே தவிர சமய நுண்மையும் ஆழமும் உணரத்தக்க கல்வி கேள்விகள் உடையவன் அல்லன். இவன் போன்ற மாக்களால் தூய நெறிக்குக்கூட இழுக்கு ஏற்படும்.

கவுந்தியடிகளின் வாதம் பொய்யுரை கலவாப் புரையில் உரை. மறையவனின் வாதம் மனித உணர்வுக்கும் சமய அடிப்படைக்கும் அப்பாற்பட்டது. கவுந்தியடிகள் மறையோனுக்கு மறுப்பு வழங்குவது மூலமாகச் சமண்நெறிக் கருத்தைச் சீறாற விளக்கிச் செல்கிறார். முயற்சி ஒழுக்கமின்றிப் பொய்கையில் மூழ்கிக் குறுக்குவழி நாடுவோன் மறையவன்; முயற்சி வாய்மை ஒழுக்கம் ஆகிய நேர் வழியை நாடுபவர் கவுந்தியடிகள். குறுக்குவழி நாடுவோர் பேதையோர்; நேர்வழி நாடுவோர் சான்றோர். மறையோன் காட்டுவது குறுக்குவழி கூட இல்லை; பித்துற்றோன் உளறும் மயக்குரை போன்றது. இவனது உரையை உறுதிப் பொருளாகக் கோவலன் கைக்கொட்டிய பொருளாக ஆசிரியர் கற்பனை செய்துகொள்வது தவறுடைத்தென்க. ஆகலின் கவுந்தியடிகளின் மொழியே உறுதிப்பொருளென்பதும், கோவலன் மனத்திருள் நீங்கிய ஒளி வளர்விளக்கு என்பதும் தெளிவாம்.

மறையவனுரையை மேற்கொண்டு சென்று பொய்கையாடியிருப்பின் கோவலன் வரப்போவதை உணர்ந்து நடக்க ஏதுவாயிருக்கும் என்றும், அவ்வுணர்வு கோவலனுக்கு ஏற்படாவாறு கவுந்தியடிகள் மறையோனுரையைப் பழித்தொதுக்கினார் என்றும் சிவலிங்கனார் அவர்கள் கருதிக் கழன்றுளார். மறையோன்கூற்று கணித்தறிந்து கூறப்பட்டதல்ல. நுண்ணறிவு படைத்த கவுந்தியடிகள் அதனாற்றான் அவனுரையை மறுக்கும்படியான நிலை ஏற்படுகிறது. கோவலன் மறையோன் கூற்றை நம்பி அவன்வழிச் செல்லும் சிற்றறிவு படைத்தோனல்லன். கோவலன் நிலையான அறிவுபடைத்தோன் அல்லன் எனினும், பெருமளவுதான் ஒழுகுஞ் சமயநெறியில் ஆழ்ந்தஅறிவும் உணர்வும் பெற்றவன்; என்பதைச் சிலப்பதிகாரஞ் செம்மையாய்க் கற்றோர் உணர்வர். மறையவன் வழிச்செல்லுதல் பேதைமைஎன்பதைக் கவுந்தியடிகளின் கூற்றுக்கு அவன் மறுப்பொன்றும் புகலாமையே அவன் உளக்கிடக்கையை நன்கு உணர முடிகின்றது.

கோவலன் எண்ணம் முழுதும் மதுரைக்கு விரைவில் சென்று பொருளீட்ட வேண்டுமென்ற அவாவினால் உந்தப்பட்டிருக்கும் பொழுது அவன் மறையவன் உரைப்படிசெல்ல மார்க்கம் ஏது? கோவலன் புறப்பட்டது பொருளீட்டுதற்கே தவிர நீராடி நினைத்த பயன் காணுதற்கல்ல. கோவலன் அடைந்த இறுதி அவனது வாழ்வினைப் பயனே ஆகும்! ஊழையும் உப்பக்கம் காணும் மனவலிமையும் முயற்சியுமிருந்தும் கோவலன் கொல்லப்பட்டான். மறையோனுரையைக் கோவலன் மேற்கொண்டு அவனுரைப்படி நடந்திருப்பினும் கோவலனது ஊழ்வினைப்பயன்விடாது; ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் தான்முந்துறுமல்லவா?

கோவலன் மறையவனுரையை மேற்கொண்டு திருமால்குன்றம் செல்லின் வீணே அஃது காலக் கழிவேயாகுமே தவிரப் பயனிருக்காது. கவுந்தியடிகள் வழியை மேற்கொண்டு கோவலன் கடுகியதால் கவலைக்குள்ளானான் என்பது காக்கை உட்காரப் பனம்பழம் வீழ்ந்தது என்ற பழமொழியைப் போலுள்ளது. கோவலனது ஊழ்வினைப் பயனை மெய்யுணர்வுபெற்ற கவுந்தியடிகளாலேயே முன்னுற உணர்ந்து காத்தருள இயலவில்லை

யெனின், மறையவனுரையைக்கொண்டு கோவலன் தன்னைத்தான் காத்தல் இயலாதென விடுக்க.

மதுரைக்கு நல்வழிகூறிய மறையவன் கவுந்தியடிகளால் கரிபூசப்பட்டான் எனச் சிவலிங்கனார் அவர்கள் நவில்வது மேலெழுந்தவாரியாக நவிலப்பட்ட உரையாகும். கவுந்தியடிகள் இகழ்ச்சிக் குறிப்பாகப் பேச நேர்ந்தது மறையவனது தகுதியின்மையேயாகும். மறையோன் பொருளுடைய கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் ஆகிய இந்நான்குமற்றவன். வெறுஞ்சமயப்பற்றாளன், சமய நுண்மையும் ஆழமும் தவவொழுக்கமும் அற்றவன். நீராடிப் பயன்பெற விழைவானே தவிர, வாய்மையின் வழாமலும் மன்னுயிர் ஓம்புதலுமாகிய அருளொழுக்கத்திற்கு அப்பாற்பட்டவன். பேதமையே பற்றுக்கோடாகக் கொண்டு திரிந்துழலும் அம்மறையனை எவ்வாறுதான் திருத்துவது? அதனாற்றான் மறையோன் தன் அறியாமையை உணரும் வண்ணம் இகழ்ச்சிக் குறிப்பாக பேச நேர்ந்தது. அவன் காட்டிய பொய்கைகளுக்கும் அறிவொடு பொருந்திய விளக்கம் அளிக்கின்றார் அடிகள். இவ்விளக்கத்திற்கும் அவன் திருந்தான் என்று உணர்ந்தே "காமுறு தெய்வம் கண்டடிபணிய நீ போ" என உரைத்தருளினர் கவுந்தியார். இவனுரை கற்ற மக்களையே ஐயுறவைக்கும் பொழுது கல்லா மாக்களின் நிலையை இயம்புதலும் ஒல்லுமோ? இப்படிப்பட்ட மறையவனுரை மறுக்கப்பட்டு இகழப்படுவதில் தவறொன்றுமில்லை. உணர்வற்ற இப்பேதமையாளனைக் கவுந்தியடிகள் இகழ்வது தவவொழுக்கத்திற்கல்லாத செயல் என முறையிடுவது முறையன்று. கவுந்தியடிகளும் தம் தவவொழுக்கிற்கு மாறுபட்ட உரையையும் பெய்யவில்லை. கவுந்தியடிகளால் மறையவனுக்குக் கரிபூசப்படவில்லை. மாறாக மறையவன்தான் வையகத்திற்குக் கரிபூச நினைந்தான் எனக்கூறல் ஒருவாறு பொருந்தும், மறையோனுக்கு விளக்கம் தந்து மறையோன் மூட இருளை விரட்டி ஓட்டும் அருட்கதிரோனாக விளங்குகிறாரெனின் பெரிதும்பொருந்தும். மறையோனது கொள்கையை மறுத்தாரே தவிர அவன் கூறிய மூன்று வழிகளை (மதுரை செல்ல) வெறுத்தாரல்லர். ஆகலின் சான்றோராகிய கவுந்தியடிகளைக் கீழோராக்க முயல்வது அறிவொடு பொருந்தாச் செயலென விடுக்க.

மேலும், மறையோன் கூற்று உண்மையானது என்பதற்கு மயக்கும் ஆரணங்குத்தெய்வம் கோவலனை இடைவழியில் மயக்கியதையும், கோவலன் மந்திரம் ஓதித்தப்பியதையும் எடுத்துக் கூறித் தம் கொள்கையை நிலைநாட்ட முயல்கின்றார். மறையோன் கூற்று உண்மையானது வெறும்புனைந்துரையாகும். இளங்கோவின் கற்பனைச் சரக்கு எனக்கொண்டு அமைதியுறுதலே சிறப்புடைத்து.

≈★≈

(தொடரும்)

இந்தி தலை மீளாது!

(கடலூர், வீ. கு. ஜீவா)

நல்லவர்க்குத் தம்மொழியே தாய்க்கு நிகராகும் — அந்தத்
தாய் தனக்கே இன்னலென்றால் தன்னுயிரே போகும்
வெல்லம் நிகர் தமிழிருக்க வீணர்சிலர் கூடி — இங்கு
வேம்பு நிகரிந்திதனை விழைகிறார் கண்மூடி

தெள்ளமுதத் தமிழிருக்கச் சிறுமதியாலிந்தி — சிறு
கள்ள வழியாகவந்து மெல்லஇங்கு தமிழைக்
கொல்லுதற்குத் திட்டமுண்டு குடிகெடுப்போருண்டு—அந்தப்
புல்லர்க்கு நாமொன்று கூறுகிறோமின்று

சிங்கம் நிகர் செந்தமிழர் வாழ்விற்கா வஞ்சம்? — வடச்
சிறு நரிகள் ஊளையிட்டால் சிறுத்தையுமா அஞ்சும்?
பொங்கியெழும் தமிழர்களின் புரட்சிவரு முன்னே—இன்றே
போக்கிடுவீரிந்திதனை புலம்பாதீர் பின்னே

வெல்லவந்த போர்ப்படையும் வென்றதில்லை எம்மை—தமிழர்
வீரத்தைப் பழித்தவர்கள் வாழ்ந்ததில்லை உண்மை
கொல்லவரும் குண்டுக்கும் குலைநடுங்க மாட்டோம்—தமிழைக்
கொல்லவரும் இந்திதலை மீளவிட மாட்டோம்!

—⁀—

அரையாண்டு சந்தாத்தொகைகட்டிய உறுப்பினர்களுக்கு!

சென்ற இதழுடன்

(இசை இருபத்தாறுடன்)

உங்கள் சந்தா முடிவடைந்ததால்

பணம் அனுப்பிச் சந்தாவைப்

புதுப்பித்துக்கொள்ளவும்.

—அமைச்சர்

குயில்

Regd. No. M. 7030.

காதல்

காதல் ஒப்பந்தம்!

விழலாக வில்லை என்
காதல் விண்ணப்பம்!
அழகிய மயிலுக்கென் நன்றி!
விழியினால் எழுதினாள் ஒப்பந்தம் முற்றும்
வெண்ணகையா லிட்டாள் கையெ ழுத்தும் (விழலாக)

பிழைசெய்த தச்சுக்கு வழிகாட்டும் வடிவு!
பெண் ணமைப்புக்கு முடிந்ததோர் முடிவு!
வழியிலோர் ஏழைக்கு வாய்த்தபொற் குவியல்!
வளவயல்காண்; அவள் சம்பா நடவு. (விழலாக)

மங்கைதரு மின்பம் மட்டுப்பட வில்லை
வையம்என் நினைவில் தட்டுப்பட வில்லை
ஐயோ அவளைப் பிரியமுடிய வில்லை
ஆர்பொறுப்பார் பிரிவால்வரும் தொல்லை (விழலாக)

தமிழகம் நெல்லையும் விலக்குதல் முடியும்
தையல்கை விலக்குதல் எப்படி முடியும்?
கமழ்ந்திடும் முல்லையிற் படிந்த வண்டு
கடைப்பார்ப்பான் உணவுண்ணல் எங்கே உண்டு! (விழலாக)

வைய மல்ல இன்பக் கடல்இது!
வாழ்க்கை அல்ல அன்பின் தொடர்பிது!
எய்திய இந்நிலை மாறுமை வேண்டும்
இருபத் தைந்து கோடி ஆண்டும்! (விழலாக)

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா, தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.